Registered as a News Paper

பக்கங்கள்: 04 — விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM — Peoples Daily — மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 23 (07-01-1992) செவ்வாய்க்கிழமை ஓசை: 323

## பதிவு செய்த டாக்டர்களுக்கே மருந்து விற்கலாம்

இலங்கை மருத்துவப் பேரவையில் பதிவு வைத்தியர்களுக்கு மாத்திரம் பார்மஸிகள் மருந்து வகைகளை விற்கலாம். மற்றவர்களுக்கு எக்காரணம் கொண்டும் விற்கக் கூடாது. இவ்வாறு சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை தலைமையில் கூடிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. உணவு, மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி த. மகாதேவா, ஆங்கில மருந்து வர்த்தகர்கள், ஆங்கில மருந்து வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

(3ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவா? விடுதலைப் புலிகளா?

# சிங்கள அரசுக்கு புதிய நெருக்கடி

## பேச்சுக்களால் எழும் சிக்கல்பற்றி ஐலன்ட்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுவார்த்தைகளை நடத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிப்பதா? அல்லது இந்திய அரசுடன் சேர்ந்து விடுதலைப் புலிகளை அழிப்பதா? இப்படியான ஒரு சிக்கலான தீர்மானத்தை எடுக்கவேண்டிய நெருக்குதல் நிலைக்கு சிறிலங்கா அரசு தள்ளப்பட்டிருப்பதாக ஐலன்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது. இந்திய அரசை பகைத்துக்கொள்ளாமல், இந்தியாவினதும் இலங்கையினதும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் புலிகள் இயக்கத்தை இந்தியாவுடன் சேர்ந்து நசுக்குவது தான் சிறந்த வழியெனவும் ஐலன்ட் பத்திரிகை சூட்சுமமாகக் கருத்துத் தெரிவித்துள்ளது.

இந்தியா விடுதலைப்புலிகள் மீதும் அதன் தலைவர் பிரபாகரன் மீதும் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாகக் குற்றம் சுமத்த முற்பட்டுள்ள வேளையில், தொண்டா சமரசத்திட்டத்தின் அடிப்படையில் புலிகளுடன் பேசினால் இந்திய - சிறிலங்கா உறவில் மேலும் விரிசல்கள் தோன்றக் கூடும் என ஐலன்ட் தெரிவித்துள்ளது.

மேலும் இந்தியாவில் பயங்கரவாத இயக்கம் என விடுதலைப்புலிகள் பிரகடனப் படுத்தப்படும் பட்சத்தில் சிறிலங்கா அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது 'சார்க்' பிரகடனத்திற்கு முரணான செயல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நியாயவிலையில் கொப்பிகள்

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதி மாணவர்களின் நலன்கருதிஊர்காவற்றுறைபலநோ. கூட்டுறவு சங்கத்தினால் நியாயவிலையில் அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி நாற்பது பக்கம் 3. 75 சதமாகவும் 80 பக்கம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மாவட்டத்தில் தமிழ் இளைஞர்கள் கைது

(திருமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் சிறிலங்காப் படையினர் தமிழ் பேசும் இளைஞர்கள் அறுவரைக் கைதுசெய்தனர். கடந்த இரண்டாம்திகதி சம்பூர் என்னும் கிராமத்தில் மூன்று தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இராணுவத்தினர் இந்த மூன்று இளைஞர்களையும் தமது முகாமுக்குக் கொண்டு சென்றனர் வேலுப்பிள்ளை உதயராசா(வயது26, சம்பூர்), வைரமுத்து அருமைத்துரை (வயது 26, சம்பூர்), செந்தில் (வயது29, சம்பூர்) ஆகிய மூவருமே சிறிலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்டனர்.

மேலும் கடந்த மூன்றாம் திகதி பச்செழு என்ற இடத்தில் வைத்து மூன்று பேரைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞரின் கருத்துஎன்ன? பிரேமதாசா கோருகிறார்

(கொழும்பு)

வட. கிழக்குப் பிரச்சினைத் தீர்விற்கு இளைஞர்கள் தமது கருத்துக்களை தெரிவிக்க வேண்டுமென சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா கேட்டுள்ளார்.

மஹரகமையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசிய போதே பிரேமதாசா இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய 'ஹர்சவர்தனா'வில் அகதிகள் அனுப்ப ஏற்பாடு

(டில்லி)

இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதான பணி இந்தமாதம் 3 ஆம் வாரத்தில் தொடங்கி விடும்.

நேற்றுப் புதுடில்லியில் சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஹரல்ட் ஹேரத் மத்திய உள்

அனுப்புவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

( 3ஆம் பக்கம் பார்க்க)

## மரபுப் போரில் வென்றாலும் கெரில்லாப் போர் நிற்காது

### அனுபவம்தந்த பாடம் என்கிறார் தொண்டா

(கொழும்பு)

சிறிலங்காஇராணுவம் மரபு ரீதியான யுத்தத்தில் வென்றாலும் கெரில்லா யுத்தம் தொடர்ந்து நடைபெறும். எட்டு வருட யுத்தத்திற்குப் பிறகும் இந்த நிலை நான் தொடர்கிறது.

இவ்வாறு திரு. தொண்டமான் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

பௌத்த பிக்குகள் உங்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நித்திலா கல்விக்கூடம் சம்பிரதாய ரீதியாக திறப்பு

(ஈச்சமோட்டை)

ழீழ விடுதலைப் புலிகள் மக்

## தொண்டாவின் யோசனை பேச்சிற்கான அடித்தளம்

### - பத்திரிகையாளர் றெஜிசிறிவர்த்தனா

இனவெறியை உசுப்பிவிட

அமைச்சர் தொண்டமானின்

## நியாயவிலையில் கொப்பிகள்

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதி மாணவர்களின் நலன்கருதிஊர்காவற்றுறைபல நோ. கூட்டுறவு சங்கத்தினால் நியாயவிலையில் அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி நாற்பது பக்கம் 3. 75 சதமாகவும் 80 பக்கம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மாவட்டத்தில் தமிழ் இளைஞர்கள் கைது

(திருமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் சிறிலங்காப் படையினர் தமிழ் பேசும் இளைஞர்கள் அறுவரைக் கைதுசெய்தனர். கடந்த இரண்டாம்திகதி சம்பூர் என்னும் கிராமத்தில் மூன்று தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இராணுவத்தினர் இந்த மூன்று இளைஞர்களையும் தமது முகாமுக்குக் கொண்டு சென்றனர் வேலுப்பிள்ளை உதயராசா(வயது26, சம்பூர்), வைரமுத்து அருமைத்துரை (வயது 26, சம்பூர்), செந்தில் (வயது29, சம்பூர்) ஆகிய மூவருமே சிறிலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு கொண்டுசெல்லப்பட்டனர்.

மேலும் கடந்த மூன்றாம் திகதி பச்செழு என்ற இடத்தில் வைத்து மூன்று பேரைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞரின் கருத்துஎன்ன? பிரேமதாசா கோருகிறார்

(கொழும்பு)

வட. கிழக்குப் பிரச்சினைத் தீர்விற்கு இளைஞர்கள் தமது கருத்துக்களை தெரிவிக்க வேண்டுமென சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசா கேட்டுள்ளார்.

மஹரகமையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசிய போதே பிரேமதாசா இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களால் எழும் சிக்கல்பற்றி ஐலன்ட்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் சமரசப் பேச்சுவார்த்தைகளை நடத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிப்பதா? அல்லது இந்திய அரசுடன் சேர்ந்து விடுதலைப் புலிகளை அழிப்பதா? இப்படியான ஒரு சிக்கலான தீர்மானத்தை எடுக்கவேண்டிய நெருக்குதல் நிலைக்கு சிறிலங்கா அரசு தள்ளப்பட்டிருப்பதாக ஐலன்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது. இந்திய அரசை பகைத்துக்கொள்ளாமல், இந்தியாவினதும் இலங்கையினதும் பிரதேச ஒருமைப்பாட்டிற்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் புலிகள் இயக்கத்தை இந்தியாவுடன் சேர்ந்து நசுக்குவதுதான் சிறந்த வழியெனவும் ஐலன்ட் பத்திரிகை சூட்சுமமாகக் கருத்துத் தெரிவித்துள்ளது.

இந்தியா விடுதலைப்புலிகள் மீதும் அதன் தலைவர் பிரபாகரன் மீதும் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாகக் குற்றம் சுமத்த முற்பட்டுள்ள வேளையில், தொண்டா சமரசத்திட்டத்தின் அடிப்படையில் புலிகளுடன் பேசினால் இந்திய - சிறிலங்கா உறவில் மேலும் விரிசல்கள் தோன்றக் கூடும் என ஐலன்ட் தெரிவித்துள்ளது.

மேலும் இந்தியாவில் பயங்கரவாத இயக்கம் என விடுதலைப்புலிகள் பிரகடனப் படுத்தப்படும் பட்சத்தில் சிறிலங்கா அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது 'சார்க்' பிரகடனத்திற்கு முரணான செயல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மரபுப் போரில் வென்றாலும் கெரில்லாப் போர் நிற்காது

### அனுபவம்தந்த பாடம் என்கிறார் தொண்டா

(கொழும்பு)

சிறிலங்காஇராணுவம் மரபு ரீதியான யுத்தத்தில் வென்றாலும் கெரில்லா யுத்தம் தொடர்ந்து நடைபெறும். எட்டு வருட யுத்தத்திற்குப் பிறகும் இந்த நிலை நான் தொடர்கிறது.

இவ்வாறு திரு. தொண்டமான் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

உங்கள் ஆலோசனைகளை வாபஸ் பெறச் செய்வதற்குப் பௌத்த பிக்குகள் உங்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய 'ஹர்சவர்தனா'வில் அகதிகள் அனுப்ப ஏற்பாடு

(டில்லி)

இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதான பணி இந்தமாதம் 3 ஆம் வாரத்தில் தொடங்கிவிடும்.

நேற்றுப் புதுடில்லியில் சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஹரல்ட் ஹேரத் மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவானைச் சந்தித்துப் பேசிய போது இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத்திருப்பி அனுப்புவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

( 3ஆம் பக்கம் பார்க்க)

## நித்திலா கல்விக்கூடம் சம்பிரதாய ரீதியாக திறப்பு

(ஈச்சமோட்டை)

அரியாலை கிழக்கு பூம்புகாரில் புதிதாக நிறுவப்பட்ட நித்திலா கல்விக்கூடம் நேற்றுக் காலை 9 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணித்தலைவர் கோ. மகேந்திரராசா அவர்கள் தமிழீழ தேசியக்கொடியை ஏற்றி வைக்க தமிழ் ஈழ அரசியல் பொறுப்பாளர் தமிழ்மாறன் அவர்களால் சம்பிரதாய முறைப்படி திறந்துவைக்கப் பட்டது.

இவ்வைபவத்தில் கலந்து கொண்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி. வேலாயுதம் உரையாற்றுகையில்,

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டாவின் யோசனை பேச்சிற்கான அடித்தளம்

### - பத்திரிகையாளர் றெஜிசிறிவர்த்தனா

இனவெறியை உசுப்பிவிட சிலர் முனைகின்றார்கள்.

அமைச்சர் தொண்டமானின் யோசனைகள் பேச்சுவார்த்தைக்கான ஓர் அடித்தளம் என்றும் பத்திரிகையாளர் றெஜிசிறிவர்த்தனா தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தொண்டமான் முன்வைத்துள்ள யோசனைகள் பேச்சு வார்த்தைக்கும், கலந்துரையாடலுக்குமான ஓர் அடித்தளமாக, திட்டவட்டமாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவை என நான் நினைக்கிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வாழப்பாடி வீட்டில் இல. இருவர் கைது

(சென்னை)

சென்னையிலுள்ள தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியின் வீட்டில் இலங்கைத் தமிழர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சென்னை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் ராமமூர்த்தியின் வீட்டில் சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாடினர் என்றும், இவர்கள் ராமமூர்த்தி வீட்டிற்கு மின்சாரக் கோளாறுகளை சரிபார்ப்பதற்காக அவ்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டாவின் தீர்வு திட்டம் இந்தியப் பிரதமருடன்பேச்சு

(கொழும்பு)

இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை செய்ய புதுடில்லி சென்றுள்ள சிறிலங்கா அமைச்சர் கரோல் ஹேரத் அமைச்சர் தொண்டமானின் சர்ச்சைக்குரிய தீர்வுத்திட்டம் குறித்து இந்திய பிரதமர் பி.வி நரசிம்மராவுடன் பேச்சுவார்த்தை நடாத்துவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஹேரத் இந்திய இலங்கை நட்புறவில் இருதரப்பு உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்காகவும் இருதரப்பு பொருளாதார வருவாய் கூட்டு முயற்சிகள் பற்றி பேச்சுகள் நடாத்த இருப்பதாகவும்செய்திகள்தெரிவிக்கப் பட்டன.

## இடமாற்றச் சபை மூலம் மாற்றங்களைச் செய்க

### யாழ். கல்விப்பணிப்பாளருக்கு பணிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் இடமாற்றங்களைத் தன்னிச்சையாகச் செய்யாமல் ஆசிரியர் இடமாற்றச் சபையைக் கூட்டியே செய்ய வேண்டும் என்று வட-கிழக்கு மாகாணகல்வி, கலாசார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் யாழ் கல்விப்பணிப்பாளரைப்பணித்துள்ளார்.

மாற்றம் குறித்து ஆசிரிய இடமாற்றச்சபை ஒருமித்த முடிவுக்கு வருவதற்கு முடியாதிருப்பின் அதைத் தமது கவனத்துக்குக் கொண்டுவந்து

(3 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு இடங்களில் மீட்புநிதி செலுத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

எதிர் வரும் வியாழக்கிழமை அன்று(9-1-92)யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும், பருத்தித்துறை, கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் தமிழீழ மீட்பு நிதி திரட்டப்படவுள்ளது என அறிவிக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாண உதவி அ. அ. பிரிவுக்குட்பட்டோருக்கு காலை 9-00 மணிதொடக்கம் மு ப. 10-00வரைக்கும்யாழ்ப்பாணம் சென். ஜோண்ஸ் அக்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.யுத்தம் முடிந்தபின்பே சிங்களவருக்கு அனுமதி

### இராணுவ அதிகாரி சொல்கிறார்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் யுத்தம் முடியும்வரை புலிகளின் காவலில் உள்ள சிங்கள இராணுவத்தினரை அவர்களது உறவினர்களை பார்வையிட அனுமதியோம் என்று சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஏறத்தாள 90 உற்ற உறவினர்கள் இந்த இராணுவத்தினரை டிசம்பர் 12 ஆம் திகதி வடபகுதி வந்து பார்வையிடுவதாக நாட்குறித்திருந்தனர் ஆனால் வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகள் நடைபெறுவதால் பாது

(4ஆம் பக்கம் பார்க்க)

பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளே
துள்ளி வாருங்கள்
கொன்னை மலிவினின்
தேவைகள் அனைத்தும் வாங்குங்கள்

பாடசாலைக்குரிய அனைத்துத்
தேவைகளையும் நிறைவேற்றும்
நிறுவனம்

# தமிழருவி

பல்பொருள் அங்காடி

71, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி 3743)


## சமாசக் கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்டச் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஆட்சிக் குழுக் கூட்டம் நாளை 8ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு சமாசப்பணிமனையில் சமாசத்தலைவர் திரு.எஸ் முருகநேசன் தலைமையில் நடைபெறும்.

அத்தருணம் சமாசத்தின் மூலம் கப்பலில் எடுத்து வரப்பட்ட சி.ஆர்.கொப்பிகள் சப்பாத்துக்கள், ரயர், ரியூப்கள் அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை மாணவர்களுக்குரிய உபகரணங்கள், சீருடைகள் அங்கத்துவ சங்கங்களுக்கு விநியோகம் செய்வது சம்பந்தமாக இக் கூட்டத்தில் ஆராயப்பட உள்ளதாகச் சமாச மாவட்டச் செயலாளர் திரு. ஏ. எம். இராஜகுமார் தெரிவித்துள்ளார்.

(24)

## 4-ம் ஆண்டு நினைவுகள்

அளிப்பு: 29 - 08 - 1961

அழிப்பு: 07 - 01 - 1988



### வீரசிங்கம் விஸ்வநாதன்

(விஸ்வம்)

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் வெங்கலச்செட்டிகுளம்.)

ஆண்டுகள் நான்கு நகர்ந்தனவோ. பெற்றோருக்குப் பெருமகனாய், உடன்பிறப்புகளின் உத்தமனாய், மனைவியின் கண்கவர் கணவனாய், பிள்ளைகளின் பாசமிகு தந்தையாய், நண்பர்களுக்கு இனியனாய், சமூகத் தொண்டனாய், மண்மீட்பின் பங்காளனாய் வாழ்ந்தீர் ஐயா நினைவுகள் நெஞ்சிருக்கும் வரை நிழலாடுகின்றனவே.

சாந்தி

மனைவி, மக்கள்
நண்பர்கள், பெற்றோர்,
உடன்பிறப்புகள்

சிலாவத்தை, முல்லைத்தீவு,

கௌரிகோட்டம், அல்வாய்,

(2063)

## ஈழநாதம் இரண்டாம் ஆண்டு நிறைவு

## போட்டிகளும் விதிமுறைகளும்

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன் இரண்டாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப் படப் போட்டி (Cartoon), கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி என்பனவற்றை நடாத்த முன்வந்துள்ளது. இப் போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

★ கருத்துப் படங்கள் (Cartoon)
★ சிறுகதை
★ கவிதை

### போட்டியில் கலந்துகொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்

★ கருத்துப் படங்கள் 15 செ. மீ X 12 செ. மீ. அளவுள்ள அட்டையில் கறுப்பு, வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

## ராமதாஸை கைது செய்தது கண்டிக்கத் தக்கது

-கருணாநிதி

(சென்னை)

கர்நாடகதமிழர் பிரச்சினை சம்பந்தமாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸையும், அக்கட்சித் தொண்டர்களையும் தமிழக அரசு கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் இவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இக் கண்டனத்தை தெரிவித்துள்ளார் இது போன்ற போராட்டங்களை பயன் படுத்திக் கொண்டு கர்நாடக தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்றும் கருணாநிதி கேட்டுள்ளார்.

## பாட நூல்கள் கப்பலில் வரும்

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் அடுத்த நாக வடபகுதிக்கு வர இருக்கும் கப்பல் மூலம் எடுத்துவரப்பட இருப்பதாக வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் கூறியுள்ளார்.

## உள்ளூராட்சித் திணைக்கள அறிவித்தல்


யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த ஊழியர்கள், சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள், சனசமூக நிலையங்களுடன் தொடர்புடையஏனைய அமைப்புக்களின் நிர்வாகிகள், பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்கள் ஆகியோர்கள் கலந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான கலந்துரையாடல்கள் பின்வரும் திகதிகளில் அவற்றிற்கெதிரே குறிப்பிட்டுள்ள இடங்களில் நடைபெறவுள்ளது. தயவு செய்து சம்பந்தப்பட்ட அனைவரும் அவ்வத்திகதியில் தத்தம் பகுதியில் நடைபெறும் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

01. வலிகாமம் பகுதி 92-01-09 யாழ் இந்துக்கல்லூரி
தீவுப்பகுதி மாலை 03 மணி. குமாரசுவாமி

## நினைவு கூருகின்றோம்

1992 - 01 - 07

(கப்டன்
(பாறுக்



1987 ஆம் ஆண்டு இதே தினத்தில யாழ். கோட்டை சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் பாறுக்** [அகமதுலெப்பை முகமதுஹனிபா- அக்கரைப்பற்று]

**சீலன்** [தங்கையா சிவகுமார் - நாவாந்துறை]

ஒட்டு சுட்டானில் உளவு பார்க்கச் செல்கையில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்

## இரண்டாம் ஆண்டு நிறைவு

# போட்டிகளும் விதிமுறைகளும்

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன் இரண்டாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப் படப் போட்டி (Cartoon), கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி என்பனவற்றை நடாத்த முன்வந்துள்ளது. இப் போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

★ கருத்துப் படங்கள் (Cartoon)
★ சிறுகதை
★ கவிதை

### போட்டியில் கலந்துகொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்

★ கருத்துப் படங்கள் 15 செ. மீ X 12 செ. மீ. அளவுள்ள அட்டையில் கறுப்பு, வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புர்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித் தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ ஆக்கங்கள் இதற்கு முன் பிரசுரமானவைகளாகவோ, வேறெங்கும் பிரசுரம் பெறுவதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் பெப்ரவரி 5 ஆம் திகதிக்கு பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்திற்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் போட்டிக்கான முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது என்பதுடன் பிந்திக் கிடைப்பவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டாது.

★ போட்டி முடிவுகள் யாவும் 17-02-1992 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும். இரண்டாவது ஆண்டு நிறைவு விழாபோட்டியில்முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

★ ஒவ்வொரு துறையிலும் தகுதியானது எனத் தேர்ந்தெடுக்கப்பட்டவை ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும். முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு இரண்டாவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம்' ஆண்டு நிறைவுப்போட்டி என கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு

ஆசிரியர்
'ஈழநாதம்'
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

# கண்டிக்கத் தக்கது -கருணாநிதி

(சென்னை)

கர்நாடகதமிழர் பிரச்சினை சம்பந்தமாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸையும், அக்கட்சித் தொண்டர்களையும் தமிழக அரசு கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன் தினம் இவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இக் கண்டனத்தை தெரிவித்துள்ளார் இது போன்ற போராட்டங்களை பயன் படுத்திக் கொண்டு கர்நாடக தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துமாறு தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்றும் கருணாநிதி கேட்டுள்ளார்.

# பாட நூல்கள் கப்பலில் வரும்

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் அடுத்த நாக வடபகுதிக்கு வர இருக்கும் கப்பல் மூலம் எடுத்துவரப்பட இருப்பதாக வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் கூறியுள்ளார்.

## உள்ளூராட்சித் திணைக்கள

# அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த ஊழியர்கள், சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள், சனசமூக நிலையங்களுடன் தொடர்புடையஏனைய அமைப்புக்களின் நிர்வாகிகள், பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்கள் ஆகியோர்கள் கலந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான கலந்துரையாடல்கள் பின்வரும் திகதிகளில் அவற்றிற்கெதிரே குறிப்பிட்டுள்ள இடங்களில் நடைபெறவுள்ளது. தயவு செய்து சம்பந்தப்பட்ட அனைவரும் அவ்வத்திகதியில் தத்தம் பகுதியில் நடைபெறும் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

| | | | |
|---|---|---|---|
| 01. | வலிகாமம் பகுதி தீவுப்பகுதி | 92-01-09 மாலை 03 மணி. | யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபம். |
| 02. | தென்மராட்சிப் பகுதி | 92-01-11 காலை 10 மணி | நகர சபை மண்டபம் சாவகச்சேரி |
| 03. | வடமராட்சிப் பகுதி | 92.01.12 காலை 10 மணி | தேவரையாளி இந்துக்கல்லூரி, கரவெட்டி. |

(சுந்தரம் டிவகலாலா)
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி 3745)

## தட்டச்சு, சுருக்கெழுத்து பயிலுநர் ஆசிரியருக்கான

# விண்ணப்பம்

பிற்மன் முறையில் சுருக்கெழுத்து கற்பிக்கக்கூடிய தட்டச்சு/சுருக்கெழுத்து ஆசிரியருக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. தகுதியுடையவர் சகல பத்திரங்களுடனும் 12-01-92 இற்கு முன் காலை 10.00 மணி தொடக்கம் 2 மணிவரையும் அலுவலகத்தில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

நன்றி

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம்.
செல்லையா உருத்திரா
தலைவர்

[R/2078]


சிலாவத்தை,
முல்லைத்தீவு,

மனைவி, மக்கள்
நண்பர்கள், பெற்றோர்,
உடன்பிறப்புகள்
கௌரிகோட்டம்,
அல்வாய்,

(2063)

# நினைவு கூருகின்றோம்

## 1992 - 01 - 07



(கப்டன் (பாறுக்

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில யாழ். கோட்டை சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் பாறுக்** [அகமதுலெப்பை முகமதுஹனிபா- அக்கரைப்பற்று]

**சீலன்** [தங்கையா சிவகுமார் - நாவாந்துறை]

ஓட்டு சுட்டானில் உளவு பார்க்கச் செல்கையில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

★ **ராதா** [அடைக்கலம் தங்கராசா - விசுவமடு]

1989 ஆம் ஆண்டு மூங்கிலாற்றுப்பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய

**லெப். மரிக்கார்** [சின்னத்தம்பி கருணாநிதி - கும்பாவெளி, மந்துவில்.]

மட்டக்களப்பில் தேச விரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ச்சிறுவன்

கண்டாவளை பெரிய குளம் பகுதியில் தேடுதல் நடத்திய இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஒரு தமிழர்

1990 ஆம் ஆண்டு இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**லெப். மதி** [வி. செல்வேந்திரன் - திருமலை]

1991 ஆம் ஆண்டு நெஞ்சுவலி காரணமாக எமைப் பிரிந்த

**றீகன்** [கனகர் மகாதேவன் - நீர்வேலி மேற்கு]

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ராதா ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

(சி-3742)

### சிந்தனைக்கு

கெட்டவனுக்கு ஓர் உதவி செய்வது, என்பது நல்லவனுக்கு தீங்கு செய்வது போலவே ஆபத்தானது.

— ப்ளாட்டஸ்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 07-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# நிபந்தனைகளால் தடுத்துவிட முடியாது

அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு ஆண்டு தோறும் சர்வதேச நிதி நிறுவனம், சர்வதேச நாணய சபை, உலக வங்கி ஆகியன கோடிக்கணக்கான டாலர்களை சிறிலங்காவிற்கு வழங்குகின்றன. உண்மையில் இந்த உதவிகள் நவீன ஆயுதங்களை வாங்குவதற்கே பயன்படுகின்றன. இதனால் சிறிலங்காவிற்கு உதவும் நாடுகளும் அந்நாட்டில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதற்கான குற்றச்சாட்டிற்கு இலக்காகின்றன. இவ்வாறு ஆஸ்திரேலியாவிலுள்ள ஐக்கிய திருச்சபையின் ஏஜென்சியான 'சமூகப் பொறுப்பு மற்றும் நீதி அமைப்பின்' இயக்குநர் வண. றிச்சாட் யூட்டனே குறிப்பிட்டுள்ளார்.

வண. றிச்சார்ட் யூட்டனே தெளிவான கருத்தொன்றை ஆணித்தரமாக முன்வைத்துள்ளார். அதாவது அடக்கு முறைகளை மேற்கொள்ளும் அரசாங்கங்களுக்கு வழங்கப்படும் உதவியானது அடக்கு முறைக்கு ஒத்துழைப்பதாகவே முடியும் என்பதாகும்.

சிறிலங்கா பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் நீண்டகாலமாகவே சிக்கியுள்ளது, அந்நிய செலாவணிப் பற்றாக்குறையால் அதன் பொருளாதாரம் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியும் அபிவிருத்தி பாதிக்கப்பட்டும் இருந்து வந்துள்ளது. ஆனால் 1983 ஆம் ஆண்டில் இருந்து பெரும் இராணுவச் செலவீட்டை சிறிலங்கா அரசாங்கம் செய்ததோடு, இலங்கையின் ஒரு இன மக்களின் பொருளாதாரத்தை அழித்தும், தொடர்ந்தும் அதே வழியில் செல்வதற்குச் சிந்திக்கின்றதென்றால் அதற்கு சாதகமான காரணி என்ன? வெளிநாட்டு உதவிகளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார அபிவிருத்தியோ அன்றி வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட வருவாய் அதிகரிப்போ அல்ல.

1977 ஆம் ஆண்டு 500 மில். ரூபாவை மட்டுமே சிறிலங்கா அரசாங்கம் பாதுகாப்புக்கென செலவீடுசெய்தது. இதுநாட்டின்மொத்த நடைமுறைச் செலவில் 3 வீதமாகும். இன்று வரவு செலவுத்திட்டத்தில் 15,000 மில். ரூபாவை ஒதுக்கியுள்ளது இது மொத்த நடைமுறைச் செலவீட்டில் 42 % எனத் தெரிவிக்கின்றனர்.

வெளிநாட்டு உதவிகளை இராணுவச் செலவீட்டிற்கு பயன்படுத்துவதில்லை என சிறிலங்கா உறுதியளிக்கலாம். ஆனால் வெளிநாட்டு உதவிகள் கிடைப்பதினாலேயே ஏனைய வளங்கள் யாவற்றையும் ஒருங்கிணைந்து போருக்காக சிறிலங்கா பயன்படுத்துகின்றது. இந்நிலையில் சர்வதேச உதவிகள் மறைமுகமாக போருக்கே செல்கின்றன.

இதேவேளை அபிவிருத்தித் திட்டத்திற்கு எனக் கொள்வனவு செய்யப்படும் பொருள்களும் இராணுவ நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இவற்றில் வாகனங்கள்- புல்டோசர்கள், ஜீப்புக்கள், டிராக்ரர்கள் - முக்கிய இடம் பிடிக்கின்றன.

இவ்வாறாக ஏதோ ஒரு வகையில் வெளிநாட்டு உதவிகள் தங்கு தடங்கலின்றி இராணுவ தேவைச்கு உதவுகின்றன. இதனைத் தடுப்பதற்கு தற்பொழுது போட்டுள்ளதுபோன்ற-மனித உரிமை மீறல்கள் - நிபந்தனைகளால் மட்டும் நிறுத்திவிட முடியாது. ஏதோ காரணம் கூறியோ அன்றி போலியான நடவடிக்கை மூலமோ தப்பித்துக் கொள்வார்கள். இந்நிலையில் உதவி வழங்குபவர்கள் உண்மையிலேயே இராணு செலவீட்டைக் குறைக்கவும், மனித உரிமைகளை பேணுவதையும் விரும்புகின்றவர்களானால் நிதியுதவியை நிறுத்தினால் மட்டுமே அது சாத்தியப்படும். இதனை உதவி வழங்குபவர்கள் செய்வார்களா?

சமாதான மாநாட்டில்

# அரபுக்களும் இஸ்ரேலும் பங்கு கொள்வதாக அறிவிப்பு

வாஷிங்டனில் இன்று ஆரம்பமாக விருக்கும் புதிய சுற்று மத்திய கிழக்கு சமாதானப் பேச்சு வார்த்தைகளில் பாலஸ்தீனவிடுதலை இயக்கம் கலந்து கொள்ளும் என இந்த இயக்கத்தின் தலைவர் யாசிர் அரபாத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தப் பேச்சு வார்த்தைகளில் இஸ்ரேலும், அரபுக்களும் கலந்து கொள்வர் என்றும், வாஷிங்டனில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது இஸ்ரேலுக்கும் சிரியாவிற்கு மிடையிலும் இஸ்ரேலுக்கும் லெபனானுக்கு மிடையிலும் இஸ்ரேலுக்கும் ஜோர்தான் பாலஸ்தீன கூட்டு தூதுக்குழுவுக்கு மிடையில் மூன்று சுற்றுப் பேச்சு வார்த்தைகள் ஒரு வராம் முதல் இரண்டுவாரம் வரை நடைபெறும் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்ற முறை நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது உண்மையான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு தடையாகவிருந்த இஸ்ரேலுக்கும் பலஸ்தீனியர்களுக்கு மிடையிலான முக்கிய தகராறு புதிய சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற இருக்கின்ற போதிலும் இன்னமும் தீர்த்து வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் குடியிருப்புத் திட்டக்கட்டடங்களை கட்டுவது என முடிவு செய்த இஸ்ரேல் பின்னர் பன்னிரெண்டு பாலஸ்தீன தீவிரவாதிகளை பிராந்தியத்திலிருந்து வெளியேற்றுவதையும் முடிவு செய்துள்ளது.

இஸ்ரேலின் இந்த இரு செயல்களும் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பிப்பதையும் பாலஸ்தீன தீவிரவாதிகளை வெளியேற்றுவதையும் எதிர்க்கும் அமெரிக்காவின் பலத்தை எதிர்ப்பைச் சம்பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாதம் பிற்பகுதியில் இஸ்ரேலின் வேண்டுகோளின்படி ஆயிரம் கோடி டாலர் கடன் வழங்குவதற்கு ஜனாதிபதி ஜோர்ஜ்புஸ்ஸை இஸ்ரேல் திருப்திப்படுத்த வேண்டியும் இருக்கிறது. இக்கடனுதவியை வழங்க குடியேற்றதிட்டங்களை நிறுத்த வேண்டுமென்ற முன் நிபந்தனையை இஸ்ரேலுக்கு அமெரிக்கா விதிக்குமென அநேக மரனவிமர்சகர்களும் இஸ்ரேல் ஆதரவாளர்களும் கருதுகின்றனர்.

சென்றமுறை வாஷிங்டனில் பேச்சுவார்த்தை அளவிற்கு செல்லாமலே இஸ்ரேல், ஜோர்தான், பாலஸ்தீன தூதுக்குழுக்கள் சர்ச்சையில் ஈடுபட்டதும் தெரிந்ததே.

இடமாற்றச்

அனுமதித்த பிறகே மாற்றம் செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் இடமாற்றச் சபையில் ஆசிரியர்களும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் இடம் பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில் அதிபர்கள் சிலர் மாற்றப்பட்டதும், அவர்கள் தெரிவித்த ஆட்சேபத்தைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை என வட-கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சுவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பதிவு செய்த

★ பதிவு செய்யப்படாத பார்மஸிகள் பதிவு செய்தல்.

★ மருந்து வகைகளை இனம் கண்டு விற்பதற்கும், குறிப்பிட்ட மருந்து இல்லா விட்டால் பிரதியீடாக வேறு மருந்து பற்றி ஆலோசனை வழங்குவதற்கு மருந்தாளரை நியமித்தல்.

★ இலங்கை மருத்துவப் பேரவையில் பதிவு செய்தவைத்தியர்கள் மற்றும் ஆஸ்பத்திரி வைத்தியர்கள் தாம் வழங்கும் சிட்டைகளில் தமதுமுத்திரையை இடுதல்

★ ஆங்கில மருத்துவர் தவிர்ந்த ஏனையோருக்குப் பார்மஸிகளில் மருந்து விற்பதை நிறுத்தல்.

★ வியாபார நோக்கில்லாமல் நியாயமான விலைக்கு மருந்துகளை விற்பனை செய்தல்

மருந்து விபரப்பட்டியல் 2 இல் உள்ள வீரியமுள்ள மருந்துகளைத்தவிர டிஸ்பிறின், ஊட்டச்சத்து வில்லைகள் போன்ற மருந்துகளைச் சாதாரணமாக எவரும் வாங்கலாம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. மேலும் பதிவு செய்யப்படாத பார்மஸிகள் சுமார் 60 வரை யாழ். குடாநாட்டில் உள்ளன எனவும், அதில்சுமார் 10 பார்மஸிகள் ஒழுங்காகப் பதிவு செய்துள்ளன என்றும், 6 பார்மஸிகள்தான் மருந்தாளர்சேவை உள்ளது என்றும் மேற்படி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## போலி கடவுச்சீட்டு குறித்து கனடா புதிய நடவடிக்கை

(ஒட்டாவா)

கடவுச்சீட்டுக்களில் மோசடி செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கனடா தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுளளது.

பாஸ்போர்ட் விண்ணப்பங்களை உறுதிப்படுத்த கையொப்பமிடுபவர்களின் எண்ணிக்கையை இறுக்குவதுடன் பாஸ்போர்ட் கோருபவர்களை நேரடியாக வரும்படி செய்யவும் பாஸ்போட்டை போட்டோபிரதி செய்வதில் புதிய தொழில் நுட்பத்தைப் புகுத்தவும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாகவும் கனடாவின் வெளிநாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்.

கனேடிய பாஸ்போட்டுகளைப் பெறுவது சுலபமாதலால் உலக கிரிமினல்கள் அதைப்பயன்படுத்துவதாகவும் கள்ளச்சந்தையில் கனேடிய பாஸ்போர்ட் 21,500 டொலர் வரை விற்கப்படுவதாலுமே இந்த நடவடிக்கைகள் எடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய

அகதிகளை இலங்கைக்குக் கொண்டு செல்வதற்கு இந்தியா ஹர்சவர்தனா என்ற கப்பலைக் கொடுத்துதவும் என்று சவான் தெரிவித்தார்.

ஆனால் சிறிலங்கா அரசாங்கம் நாடு திரும்பும் அகதிகளுக்குப் பாதுகாப்பும் பிற வசதிகளையும் செய்ய வேண்டும் என்றும்அவர் கேட்டுக்கொண்டார்.

வாழப்பாடி

வப்போது சென்று வந்தார்கள் என்றும்,

கைதுசெய்யப்பட்ட இவர்கள் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

இதேநேரம் வாழப்பாடி ராமமூர்த்தி இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசும்போது, ''தனது வீட்டிற்குவந்த இலங்கைத்தமிழர் இருவரையும் விசாரிக்கும்படி தான் தான் பொலிசாரிடம் கேட்டுக் கொண்டதாக'' தெரிவித்தார்.

இவர்கள் கைதுசெய்யப்பட்டதைத்தொடர்ந்து ராமமூர்த்தியின் வீட்டில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும்பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நான்கு

கடமியிலும், நல்லூர் உதவி. அ. அ. பிரிவுக்குட்பட்டோருக்கு முற்பகல் 10 - 15 மணி தொடக்கம் மு.ப. 11-15 மணி வரை திருநெல்வேலி இந்து இளைஞர் சங்க மண்டபத்திலும் (வை. எம்.எச்.ஏ) பெறப்பட உள்ளது.

கரவெட்டி உதவி. அ அ பிரிவுக்குட்பட்டோருக்கு பி.ப. 1-30 மணி தொடக்கம் பி. ப. 3-00 மணி வரையும் நெல்லியடி மில்லர் மத்திய மகா வித்தியாலயத்திலும், பருத்தித்துறை உதவி அ. அ. பிரிவுக்குட்பட்டோருக்குபி.ப3-30 மணி தொடக்கம் மாலை 5-00மணி வரை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும்பெறப்பட உள்ளன.

## நிர்வாகிகள் தெரிவு

யாழ். பட்டப்படிப்புக்கள் கல்லூரியின் வெளிவாரி மாணவர் ஒன்றியத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஒன்றியத்தின் தலைவராக திரு.என்.எம் ராஜா, செயலாளராக திரு.எம்.பி. அருளானந்தன், பொருளாளராக திரு. கே. கே. யோகநாதன் ஆகியோரும் செல்விகள் சி. தாமரைச்செல்வி, சி.கௌசல்யா ஆகியோர் முறையே துணைத்தலைவர், துணைச் செயலாளராகவும் மற்றும் இதழ்ஆசிரியர்களாகசெல்விசி. பாரதியும்திரு.சிஇளங்கோவும் 21 பேர்கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன் காப்பாளராக திரு.சத்தீஸ்வரன் தெரிவு செய்யபபட்டிருக்கிறார்.

நித்திலா

இப்பாடசாலைக்குச் சுமார் ஐந்து ஆசிரியர்கள் யாழ். கல்வித்திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், வெகு விரைவில் ஆண்டு 11 வரை வகுப்புக்களை விஸ்தரிப்பதன் மூலம் மாணவர்கள் சிரமம் இன்றி கல்வி பயில்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளதுடன், இப்பாடசாலையின் அதிபாராக திரு.சண்முகலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் யாழ்.மாவட்ட மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்விஜெயா, கல்வி அதிகாரி திரு. சிவானந்தன், கனகரத்தினம் மகாவித்தியாலய அதிபர் திரு. இராமலிங்கம், வண. பிதா சிங்கராயர் ஆகியோரும் கலந்து கொண்டுஉரையாற்றினர்.(43)

இளைஞர்

ணிலையில் வடக்குக்கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு சம்பந்தமான கருத்துக்களை நாட்டில் உள்ள இளைஞர்கள் முன்வைக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

வடக்குக் கிழக்கு மக்களின் பிறந்த மண்ணும் இலங்கைதான். நாட்டின்இறைமையை, பிராந்திய ஒருமைப்பாட்டை, ஒற்றையாட்சித் தன்மையை நூறு சத வீதம் பாதுகாக்க வேண்டுமானால் சகல இனங்களுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும் என்றும் பிரேமதாசா தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

## கொக்கட்டிச்சோலை படுகொலை; இருதினங்களில் இறுதிவிசாரணை

கொக்கட்டிச்சோலை படுகொலை சம்பவங்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி விசாரணைகள் வரும் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் மட்டக்களப்பு விமான நிலையக் கட்டடத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிவிசாரணைகளில் சாட்சியமளிக்க அறுபதுக்கு மேற்பட்டோருக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆங்கில ஆசிரியர்; யாழ். போட்டிப் பரீட்சை

ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அதே வேளை கடந்தஆண்டிற்கான க. பொ. த. உயர் தரத்திற்கான விசேட பரீட்சையும், ஆண்டு ஐந்து மாணவர்களுக்கானபுலமைப் பரிசில் பரீட்சையும்ஒரே சமயத்தில்நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் பரீட்சைக்கான திகதிபற்றிஇதுவரைமுடிவுஎடுக்கப்படவில்லை.

மேலும் க.பொ.த. மனையியல் பாடத்திற்கான செய்முறைப்பரீட்சைகள்இனிமேல் யாழ். மாவட்டத்திலேயேநடைபெறும்என்றும்கடந்த ஆண்டுநடைபெற்ற க.பொ.த.உயர் தரப் பரீட்சைக்கானமனையியல் செய்முறைப் பரீட்சை இம்மாதம் பிற்பகுதியில் நடைபெறும் என்றும் தெரியவருகிறது. (க)

### ஆண்டின் நடுப்பகுதியில்

## தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்

வடபகுதியில் தொண்டர் ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டு நடுப்பகுதியில் நிரந்தர நியமனம் வழங்கப்பட இருக்கிறது.

வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்ட கால எல்லையில் கடமை ஆற்றி தற்போது சேவையில் இல்லாதவர்களுக்கும், இவ்வாறு சேவையில் இருந்தவர்களின் வயது எல்லைகளில் மாற்றம் ஏற்பட்டவர்களும் மற்றும் க. பொ. த. சாதாரண தரத்தில் கணிதம், தாய்மொழி ஆகியவற்றில் சித்தி அடைந்து ஆசிரிய சேவைக்குரிய அடிப்படைதகைமைகளைக் கொண்டவர்களதும் விண்ணப்பங்கள் நியமனத்தின்போது நிராகரிக்கப்பட மாட்டாது என்பன போன்ற விடயங்களில் இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

பெரும்பாலும் இவ்வாண்டு யூலை மாதம் இறுதிப்பகுதியில் நியமனம் வழங்கப்படுவதற்கு சாத்தியக் கூறுகள் இருப்பதாககூறப்படுகிறது.

## தெரிவுக்குழுவிற்குள் ஆதரவு திரட்ட முயற்சி

இனப்பிரச்சினைக்கான தனது தீர்வுத்திட்டத்திற்கு தென்பகுதியில் ஆதரவுதிரட்டுவதில் அமைச்சர் திரு எஸ். தொண்டமான் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு காணவென அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் 43 உறுப்பினர்களையும் தனித்தனியாக சந்தித்து தனது தீர்வுத்திட்டம் குறித்து விளக்கம் அளித்துவருவதுடன் அவர்களது ஆதரவையும் திரட்ட முயற்சித்து வருகிறார். மேற்படி உறுப்பினர்களில் இதுவரை பெரும்பாலானோரை அமைச்சர் தொண்டமான் சந்தித்திருக்கிறார்.

அத்துடன் பௌத்தகுருமாரையும் ஏனைய மதத்தலைவர்களையும் அமைச்சர் சந்தித்து வருகின்றார். எதிர்வரும் 10ஆம் திகதியும், 21ஆம் திகதியும் நடைபெற இருக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்தில் அமைச்சர் தொண்டமானின் தீர்வுத்திட்டம் விவாதிக்கப்படும் என்று தெரியவருகிறது. இக்கூட்டத்தின் பின்னரே தனது யாழ்ப்பாணவிஜயம்குறித்துதீர்க்கமானமுடிவு எடுக்கப்படும்என்றுஅமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கின்றார்

## ஜோர்ஜிய தலைநகரில் சண்டை தொடர்கிறது

ஜோர்ஜியா தலைநகரானதிபிலிசியில் கடுமையான சண்டை மீண்டும் தொடங்கியுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மலைப்பகுதியில் உள்ள புதிய பீரங்கி நிலைகளில் இருந்து எதிர்த்தரப்புப் படைகள் பாராளுமன்ற கட்டடத்தின் மீது பல நேரடித் தாக்குதல்களை நடாத்தின என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மரபுப் போர்

வதிவிடத்திற்கு முன்னால் சத்தியாக்கிரகம் ஒன்றை நடாத்த முடிவு செய்துள்ளார்களாம் என்றகேள்விக்குப் பதிலளித்த தொண்டமான், அப்படி நடந்தால் நடக்கட்டும் நேரகாலம் இருந்தால் நானும் அவர்களுடன் சேர உள்ளேன். எது எப்படியாயினும் எனது ஆலோசனைகளை வாபஸ் பெறும் நோக்கம் என்னிடமில்லை. எனது ஆலோசனைகள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் உள்ளது தெரிவுக்குழு அதுபற்றி முடிவு செய்யும் என்றார்.

சமாதானத்தை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்ற உண்மையான நோக்குடன் எனது ஆலோசனைகள் உருவாக்கப்பட்டன. ஆனால் எனது ஆலோசனைகளுக்குப் புலிகள் தரப்பிலிருந்து பதில் எதுவுமில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒரு ஞானச்சிந்தனை

### இந்திய தூதர் ஜா

(கொழும்பு)

இந்திய இலங்கை ஒப்பந்தம் இருநாடுகளின் கூட்டு முயற்சியின் விளைவாக ஏற்பட்ட ஒரு ஞானச் சிந்தனை. அனுபவமுள்ள பலர் நமது இன்றைய பிரதமர் உட்பட-இதற்கு பங்களிப்பு செய்துள்ளார்கள். பார்த்த சாரதி உட்பட பல சிந்தனையாளர்களின் எண்ணமும் அனுபவமும் இதில் இடம்பெற்றுள்ளன. ஆனால் எதிர்பார்த்தபடி ஒப்பந்தம் செய்யப்படாமல் போனது நமது பெரிய துரதிர்ஷ்டவசமாகும் என்று இந்திய தூதுவர் நாகேந்திர நாத்ஜா கொழும்பு தமிழ்ப் பத்திரிகைக்களித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் அந்த பேட்டியில் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியாவின் தலையீடு பற்றி குறிப்பிடுகையில் இந்த பிரச்சினையை பொறுத்த மட்டில் இந்தியா வெளியாளனாக இருக்கலாம் ஆனால் அன்னியர்கள் அல்ல. அன்னியர்கள் என கூறுவது எதார்த்த பூர்வமான சிந்தனையாகாது, நியாயமுமாகாது என்று கருத்து வெளியிட்டுள்ளார்.

இது குறித்து மேலும் ஒரு படி சென்று விளக்குகையில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் இருதரப்பினரில் நாங்களும் ஒருதரப்பு. நாங்கள் எப்படி பங்களிப்பாளனாக இருக்கமுடியும் என்பதுபற்றி மிகவும் கவனிப்போடு பேசி முடிவெடுக்க முடியும் என்றதுடன் தூதுவர் ஜா முடிவில் இப்பிரச்சினையில் இந்தியா பங்கெடுக்கும். நாங்கள் மேலதிகமாக பங்களிப்பு செய்வதற்கான அன்னியரல்ல. ஆகவே இனப்பிரச்சினையைப் பொறுத்தமட்டில் நாம் வெளியாரல்ல என்றார்.

### மயானத்தில் காணப்பட்ட சடலம்

## காவல்துறையினரால் ஆஸ்பத்திரியில் சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்வடக்கு மயானத்தில் காணப்பட்ட சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் தமிழீழகாவல்துறையின் கோப்பாய் பணிமனையினர் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இச்சடலத்தின் விபரம் வருமாறு:

வயது சுமார் அறுபது இருக்கும். நிறம் கறுப்பு, தலைமுடி மேவி இழுக்கக் காணப்பட்டது கறுப்பு பிறேம் போட்ட மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார். உயரம் 5 அடி 6 அங்குலம். இறுதியாக வெள்ளை முழுக்கை சேட்டும், வெள்ளை பொலியஸ்ரர் வேட்டியும் அணிந்திருந்தார். நீல நிற பாட்டாச்செருப்புஅணிந்திருந்தார். கறுப்பு பச்சை நிறப் பிளாஸ்ரிக் பை ஒன்றும் வைத்திருந்தார்.

மேலதிக விபரங்களுக்குக் கோப்பாய் காவல்துறைப்பணிமனையுடன் தொடர்புகொள்ளும்படி தமிழீழ காவல்துறையினர்கேட்டுக் கொண்டுள்ளனர்

## க. பொ. த. உ. பரீட்சை புள்ளிகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டு நடைபெற்ற 90 ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர் தர விசேட பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகள் வெளியாகியிருக்கின்றன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்குரிய புள்ளிகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. பாடசாலைப் பரீட்சார்த்திகளது புள்ளிகள் இன்று பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்படவிருக்கின்றன. கொழும்பு சென்றிருந்த யாழ். கல்விப்பணிப்பாளர் இப்புள்ளிகள் தொடர்பான விபரங்களை எடுத்து வந்திருக்கிறார்.

பல்கலைக் கழக அனுமதிக்குத் தேவையான தகைமைகள் தொடர்பாக புள்ளிகளது எல்லையை (கட்அவுட்) தீர்மானிப்பதில்பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு ஈடுபட்டு வருகின்றது. விரைவில் இது தொடர்பானதகவல்கள்வெளிவரும் என்று தெரியவருகிறது. (க)

## மரடோனா ஒய்வு

உதைபந்தாட்டப் போட்டி எதிலுமே இனி பங்கு பற்றப் போவதில்லை என பிரபல உதைபந்தாட்ட வீரர் மரடோனா அறிவித்துள்ளார்.

1990 ஆம் ஆண்டு இத்தாலிய லீக் மரடோனா போதை வஸ்து பழக்கத்திற்கு உட்பட்டார் என்றகாரணத்தால் விளையாடுவதற்கு இரண்டு வருடங்கள் உலகந் தழுவிய தடையை விதித்திருந்தது. இத்தடை இந்த ஆண்டு யூன் மாதத்துடன் முடிவடைகிறது. இதனைதொடர்ந்தே மரடோனா இவ்வாறு தெரிவித்துள்ளார்

### தொண்டாவின்

றெஜிசிறிவர்த்தனா பிரபல பத்திரிகையாளராகவும், இலங்கை இனப்பிரச்சினை குறித்து கூரிய பார்வைகொண்டவராகவும் தினகரன் குறிப்பிட்டுள்ளது

### இந்தியாவா?

எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவின் உதவி இல்லாமல் தனித்து நின்று விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போராடுவதோ அன்றி அவர்களை வெற்றி கொள்வதோ முடியாத காரியம் எனவும் தெரிவிக்கும் ஐலன்ட், சமீபத்தில் இந்தியக் கடற்படை கைப்பற்றிய புலிகளின் கப்பலில் இருந்து இந்தியாவின் முக்கியத்துவம் தெரியவரும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

### திருமலை

கைது செய்தனர். 64 ஆம் கட்டை மூதூரைச் சேர்ந்த சீதன் செஞ்சுடர், அதேஇடத்தைச் சேர்ந்த கணேஷ் (வயது 20), அதே இடத்தைச் சேர்ந்த அன்ரனி(வயத26)ஆகியோரை இராணுவத்தினர் கைதுசெய்தனர்.

### நியாயவிலையில்

7. 50 சதமாகவும் 120 பக்கம் 14. 50 சதமாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது.

தீவக மக்களுக்கான இரண்டாம் கட்ட மண்ணெய் இன்று முதல் ஒரு அட்டைக்கு ஒரு லீற்றர் வீதம் வழங்கப்படும் எனவும் பதினைந்து நாட்களின் பின் மூன்றாம் கட்டம் விநியோகிக்கப்படும் எனவும் இதன் பதில்பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## வடக்கு உற்பத்திப் பொருள் கப்பல்மூலம் கொழும்பிற்கு

யாழ். மாவட்டத்தின் உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் சிலவற்றைக் கப்பல் மூலம் தென் பகுதிக்கு எடுத்துச்செல்வதற்கு யாழ். அரசாங்க அதிபரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

சுருட்டு, புகையிலை, வெங்காயம் போன்ற விவசாய உற்பத்திப்பொருள்களைக் கப்பல் மூலம் தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொருள்களைக் கொழும்புத் துறைமுகத்தில் வைத்து தீவிர பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே தரையிறக்க அனுமதிக்கமுடியும் என்று கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம்அறிவித்துள்ளது. (க,ச)

## எழுதுவினைஞர் பரீட்சை தாமதம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் எழுதுவினைஞர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைகள் தாமதமாகியுள்ளன.

அனைத்து வடபகுதி மாவட்டங்களிலும் சமகாலத்திலும் மும் மொழிகளிலும் பரீட்சையை நடாத்துவதற்கும் ஏற்பாடுகள் நடைபெற்று வருவதால் இத்தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

இம்மாத இறுதியில் பெரும்பாலும் பரீட்சை நடைபெறும் என்றும் இதற்கான வினாத் தாள்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் எடுத்து வரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்பரீட்சையைத் தொடர்ந்து பரீட்சைத் திணைக்களத்தினரால் கிராமசேவகர்களை தெரிவு செய்வதற்குரிய போட்டிப் பரீட்சை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறன. (க, ச)

### யாழ்.

காப்பு அதிகாரிகள் இவர்களை இங்குவர அனுமதி மறுத்துவிட்டனர்.

கொழும்பு ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தலைவர் பியரிவெத்தாச் கூறுகையில் உறவினர்களை பார்வை இடுவது குறித்து பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடுவோம் என்று கூறியுள்ளார். அவர் மேலும் பாதுகாப்பு அதிகாரிகள் டிசம்பரில் அனுமதி வழங்காததையிட்டு தாம் ஆச்சரியமுற்றதாகவும் இது மனிதாபிமான அடிப்படையில் மிகவும் முக்கியத்துவமான பயணமாக அமைந்திருந்தது என்றும் கூறியுள்ளார்.

அத்துடன் இந்த இராணுவத்தினரின் உறவினர்களும் அதிர்ச்சிஅடைந்துள்ளதாகவும் மீண்டும் அரசுடன் தொடர்பு கொண்டு புதிய திகதியை நிர்ணயிக்க இருப்பதாகவும் அவர் கூறினார்.

## கடத்தல் தந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன

வடபகுதிக்கு தடைசெய்யப்பட்ட பொருள்களை லொறிகளில் கடத்திச் செல்ல மேற்கொள்ளப்பட்டுவந்த தந்திரங்கள் சிலவற்றை தடைமுகாம்களிலுள்ள படையினர் கண்டுபிடித்துள்ளனர் என்று சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில்1 992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது